
## 5. தகவல் செயலாக்கம்


### I. கொள்குறி வகை வினாக்கள்

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் $n$ என்பது படிகளின் எண்ணிக்கையையும், $f(n)$ என்பது சம அளவிலான முக்கோணங்களின் எண்ணிக்கையையும் குறிக்கிறது எனில், $n$ மற்றும் $f(n)$ -க்கு இடையிலான தொடர்வு ________ ஆகும்.





(1) $n^2$ (2) $n(n+1)$ (3) $n+1$ (4) $2n$

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் $x$ என்பது படிகளின் எண்ணிக்கையையும் $y$ என்பது பயன்படுத்தப்பட்ட தீக்குச்சியின் எண்ணிக்கையையும் குறிக்கிறது எனில், $x, y$ –க்கு இடையேயான தொடர்வு




(1) $2x+1$ (2) $2x-1$ (3) $3x-1$ (4) $3x+1$

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் $x$ என்பது படிகளின் எண்ணிக்கையையும் $y$ என்பது பயன்படுத்தப்பட்ட தீக்குச்சியின் எண்ணிக்கையையும் குறிக்கிறது எனில் $x, y$ –க்கு இடையேயான தொடர்பு



(1) $2x-3$ (2) $2x+3$ (3) $3x+2$ (4) $3x-2$

4. கொடுக்கப்பட்ட தீக்குச்சிகளாலான அமைப்பின் எண் தொடர்



(1) 1,2,3,4,5,... (2) 3,4,5,6,7,... (3) 3,5,7,9,11,... (4) 1,3,5,7,9,...

5. 1,3,5,7,... என்ற எண் தொடரின் பொது வடிவம் __________

(1) $2n-1$ (2) $n+2$ (3) $n+3$ (4) $2n$

6. $x, y$ –க்கு இடையேயான தொடர்பு $y=2x-5$ . $x=3$ எனில், $y$-ன் மதிப்பு

(1) 5 (2) 1 (3) 2 (4) 7

7. 1,8,27,64,... என்ற எண் தொடரின் பொதுவடிவம்

(1) $n^2$ (2) $n^3$ (3) $n+7$ (4) $3n$

8. கீழுள்ள அட்டவணையிலிருந்து $x, y$ –க்கான சரியானத் தொடர்பைத் தேர்ந்தெடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்ளீடு ($x$) | 0 | 1 | 2 | 3 | 4 |
| விளைவு ($y$) | 0 | 1 | 4 | 9 | 16 |

(1) $y=3x$ (2) $y=x^2$ (3) $y=3$ (4) $y=x^3$

9. பாஸ்கலின் முக்கோணத்தில் ஒவ்வொரு நிரையின் கூடுதலையும் _________ -ன் அடுக்காக எழுதலாம்.

(1) 5 (2) 4 (3) 3 (4) 2

10. பாஸ்கலின் முக்கோணத்தின் இரண்டாவது சாய்வு வரிசையில் உள்ள எண் தொடரின் பொது வடிவம்________

(1) $n+1$ (2) $n+2$ (3) $n+3$ (4) $n+4$

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக

11. கீழுள்ள அட்டவணையில் $x, y$ –ன் மதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. $x, y$ ஆகியவற்றிற்கிடையேயான தொடர்பு _________.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $x$ | −2 | −1 | 0 | 1 | 2 |
| $y$ | 4 | 1 | 0 | 1 | 4 |

12. −6, −4, −2, 0, 2, 4, ... என்ற எண் தொடரின் அடுத்த உறுப்பு _________.

13. 1,4,7,10,... என்ற எண் தொடரின் பொது வடிவம் _________.

14. பாஸ்கலின் முக்கோணத்தில் 5ஆம் வரிசையில் உள்ள எண்கள் _________.

15. பாஸ்கலின் முக்கோணத்தில் 3ஆம் சாய்வு வரிசையில் உள்ள எண்கள் _________ எண்கள் என அழைக்கப்படுகின்றன.

LIVEWORKSHEETS